


**09.09.2019**

## 10. 'பெருங்காற்றை' எதிர்கொள்ளும் விசுவாசம்!

'**ம**ரித்த லாசருவின் கல்லறை' போன்ற பெரும் துயரங்கள் எத்தனை இருந்தாலென்ன? அவைகளை 'ஜெயித்திடும் விசுவாசத்திற்கு' ஒரு ரகசியத்தை இயேசு கற்றுக்கொடுத்தார்! 'அந்த கல்லறைக்கு' முன்நின்று "வானத்தை அண்ணாந்து பார்த்து, கண்களை ஏறெடுத்து" ஸ்தோத்திரம் செய்தார்! இப்போது 'கல்லறையைப் பார்த்து' கட்டளையிட, அவன் உயிர் பெற்றான்! சங்கீதம் 148:1-ல்"முதலாவது"வானங்களை ஏறெடுத்து பரமண்டல தேவனையும், அவரது உன்னத மகத்துவங்களையும் துதித்தபிறகே, சங்கீதம்148:7-ம் வசனத்தில் 'பூமியிலுள்ள துயர சம்பவங்கள்' நம் கண்களுக்கு சிறியதாய் தோன்றும்! விசுவாசம் பிறக்கும்! 8-ம் வசனத்தின்படி "அவர் சொற்படி கேட்கும், பெருங்காற்றே!" என நாம் கூறும் விசுவாசம்! ஆம், அவர் கட்டளையிட, அவர் சொற்படி கேட்டு லாசரு உயிர்பெற்றான்! (யோவான்11:43). உங்களின் நெஞ்சம் அமைதி பெறும்!!

**- ரத்னம்**